**Kanton Schaffhausen**
**Dienststelle Primar- und Sekundarstufe I**

Herrenacker 3
CH-8200 Schaffhausen

www.sh.ch

T +41 52 632 72 85
ruth.marxer@ktsh.ch

பெற்றோர்/சட்டபூர்வமான
பாதுகாவலர்களிற்கு

சவ்ஹவுசன், 4. ஆனி 2020

## பாடசாலையில் தொடர்பு-தடமறிதல்

அன்பான பெற்றோரே/சட்டபூர்வ பாதுகாவலர்களே

கொரோனா வைரஸ் தொடர்பாக பொதுச்சுகாதாரத்திற்கான கூட்டாட்சி அலுவலகத்தின் மேலும் ஒரு முக்கிய நடத்தை விதி கவனிக்கப்படவேண்டியுள்ளது: நோய் அறிகுறிகள் உள்ளவர்கள் தம்மை சுய-தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்குவதுடன் முடிந்தால் தம்மை பரிசோதனைக்கு உள்ளாக்க வேண்டும்.

குடும்ப சூழலில் இதன் பொருள்:

– உங்கள் பிள்ளை காய்ச்சல் மற்றும்/அல்லது இருமல் அறிகுறிகளைக் கொண்டிருந்தால் வீட்டில் இருக்க வேண்டும்.
– உங்கள் பிள்ளை ஏற்கனவே பரிசோதிக்கப் பட்டிருந்தால் முடிவுகள் கிடைக்கும் வரை அதேபோல் வீட்டிலேயே இருக்க வேண்டும்.

பாடசாலையில் அறிகுறிகளைக் காட்டும் மாணவிகள் மற்றும் மாணவர்கள் ஆசிரியர்களால் வீட்டிற்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்,2.ஆவது ஆரம்ப வகுப்பு வரையுள்ள பிள்ளைகளில் பெற்றோருடன் கலந்தாலோசித்த பின்னரே.

இந்த வழக்கில் சாத்தியமான கொரோனா பரிசோதனைக்கான அடுத்த படிகளைத் திட்டமிட மாநில Corona-Hotline ஐ (தொலைபேசி. **052 632 70 01**, வேலைநாட்கள் 8.00-18.00 மணி) அழைக்குமாறு கேட்கப்படுகிறீர்கள். பொதுவாக அறிகுறியுள்ள அனைத்து இளையோரும் பரிசோதிக்கப்பட வேண்டும்.

தயவு செய்து உங்கள் பிள்ளையினதும் முழுப் பாடசாலையினதும் நலனிற்காக இந்த நடத்தை விதிகளைப் பின்பற்றவும். உங்கள் ஒத்துழைப்பிற்கு நன்றி மற்றும் உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் நல் ஆரோக்கியத்திற்கான வாழ்த்துக்கள்.

வாழ்த்துக்கள்

சேவைநிலையம் ஆரம்பம்-
மற்றும் இரண்டாம்நிலை I

Ruth Marxer, தலைவர்